


உ

குகமயம்

"கந்தனின் புகழைக்கேட்டு
கந்தனின் நாமம் பாடி
கந்தனின் பாதமேத்து மனமே"

# மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய மாஹேஸ்வரபூசைத் தொண்டர்சபைச் செய்திகள்

01-05-2007 தொடக்கம் 30-04-2008 வரை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்.

# மாவைக்கந்தன் ஆலய
# மஹேஸ்வர பூசைத் தொண்டர் சபை
# 2007 - 2008 அறிக்கை

பக்தியன்புனிறைந்த நெஞ்சினில் துளிரும் உணர்வுகளாலும், நிறைந்த சிந்தனைகளில் மலர்ந்த எண்ணங்களாலும், உலகெலாம் சைவநீதி குறைவிலாதுவிளங்கி, உயிர்கள் நன்றாகவே வாழவேண்டுமென்ற சிந்தனைகளிற்கேற்ப கருமங்களை முன்னெடுத்துவரும் சைவச் சான்றோர்களே, நீவிரெல்லோரும் சிறந்த திருவட்செல்வங்களோடு 'இனிதே வாழ முருகப்பெருமானது திருவருளும் உங்கட்கெல்லாம் கிடைக்க வேண்டுமென நாமும் பிரார்த்திக்கின்றோம்.

*மா. ஆ. ம. பூ. தொண்டர் சபை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மாவைக்கந்தன் ஆலய மஹேஸ்வர பூசைத் தொண்டர் சபை (2007-2008) சர்வசித்து வருட அறிக்கை

சைவத்தமிழர்களாகப் பிறந்து வளர்ந்து உலகை உய்விக்க வேண்டுமென்பதற்காக எம்சிவத்தமிழர்கள் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்வதே தமிழர்களது பண்பாடாக அமைய வேண்டுமென்பதற்காக ஆற்றிய அறங்கள்தான் பழங்காலந்தொட்டு இன்றுவரை உயிர்கொண்டு வாழ்கிறது. அதனாற்தான் இவ்வுலகு அழிந்துவிடாது நிலை கொண்டிருக்கின்றது.

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிதெனத்
தமியர் உண்டலும் இவரே, முனிவிலர்
துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவ தஞ்சி
புகழெனின், உயிருங் கொடுக்குவர், பழியெனில்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்னமாட்சி அனையராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுனர் உண்மையானே

(புறநானூறு)

பிறருக்காக நாடினிற்கும் பண்பு சமூக நலன்கட்கு பேருதவியாக அமைவதையுணர்ந்துதான் சமூக செயற்பாடுகளை நிலைநிறுத்தும் நோக்கமாக 'அறங்கள்' என அவற்றை ஆன்றோர் கறபித்தனர். இத்தகைய அறங்கள் முப்பத்திரண்டாக அமையலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமாதேவியார் உலகியல் வாழ்வுகள் இனிதே நிலைபெற்று உன்னதமாக அமைய வேண்டுமென்பதற்காக காஞ்சிப்பதியில் வந்துதித்து முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தார் என்பது புராண வரலாறு. உமாதேவியார் சிவபிரானிடம் அனுகி, 'யான் பூமியில் அறம் வளர்க்க விரும்புகின்றேன்' எனவும், 'அறம் வளர்க்க உணவுதான் முதற்கண் தேவையாகும். உண்டி கொடுத்தால்தான் உயிர் வாழும். உயிர் வாழ்ந்தால்தான் அறங்கள் உயரும்' எனக் கூறி பிராட்டியாரிடம் இருநாழி நெல்லளித்து, 'இதைப் பூவுலகில் கொண்டுசென்று உழவுத்தொழிலாற் பெருக்குவித்து அறங்களை ஆற்றுக' எனக் கூறினார். அவ்வாறே கங்கைநாட்டுழவர்களிடம் நெல்லைக் கொடுத்து விருத்திசெய்து, காஞ்சியிற்போய் உழவாற்கொண்ட நெல்மணிகள் மூலம், மக்களது பசியையாற்றி அதனோடு முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்துவந்ததோடு மக்களையும் அவ்வாறு செய்குக எனப்பணித்தார். 'அறம் வளர்த்த நாயகி' அன உமையம்மையின் நாமம் இன்றும் நிலைத்துநிற்கிறது

முப்பத்திரண்டு அறங்களைப்பற்றி அறியத்தரும் திவாகரம், பிங்கலம், சூடாமணி பொன்ற நூல்கள் அவற்றின் விளக்கங்கள் பற்றிய தகவல்கள் தருகின்றன. இவற்றில் ஓதுவார்க்குணவு, அறுசமையத்தோர்க்குணவு, பசுவுக்குணவு, பசித்தோர்க்குணவு, சிறைச்சோறு என்பன முதலிடம் பெறுகிறது. அருமையான செல்வமாகத் தோற்றங்கொண்ட முப்பத்திரண்டு அறங்களது செயற்பாடுகளை காலங்கள் பலகழிய, பிறசமயத்தவர்களும் அவர்களைச் சார்ந்து வாழும் மிலேச்சர்களும் அறங்களின் சாயல்களை மெல்லமெல்ல மாற்றியமைத்து தத்தம் சுயநல நோக்கங்கட்காக அவற்றை ஓர் போலியான முறையில் கடைப்பிடித்தனர். இன்றும் இந்நிலை காணப்படுகிறது. இதனால் தூய அறச்செயல்கள் மெல்லமெல்லத் தூர்ந்தன. இப்ப ஏதோசில தவச்செயல்களின் உந்துதல்களால் முன்னெழுந்த அறங்கள் இடையில் கண்ட இடர்களூடாகவும் மெல்லமெல்ல வளர்ச்சி பெற்றன. ஓதுவார் சாலைகள், ஓதுவார்க்குணவு என்றெல்லாம் எங்கும் தோற்றங்கள் பெற, அங்கெல்லாமிருக்கும் ஆலயங்கள்தான் இப்போது துணைபோகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லங்களிலும் இவை இடம்பெறுகின்றன. மகேஸ்வர பூசைகள் மூலம் அறச்செயற்பாடுகள் எங்கும் நிகழ்வதால் காலப்போக்கில் முப்பத்திரண்டு அறங்களும் முன்னேற்றங்கொள்ளும் என்பதில் ஐயமேயில்லை.

இதனையுணர்ந்துதான் இவ்வறங்களை மக்கள் சமூகத்தின் துணைகளோடு முன்னெடுக்கும் முயற்சியாகவே மாவையாலயத்தில் மகேஸ்வரபூசைத் தொடர்சபையை தோற்றுவித்து இச்சபை மூலம் அன்னதான நிகழ்வைத் தினமும் முன்னெடுக்கும் வாய்ப்பை ஒழுங்குசெய்து, அதனால்பெறும் விளைவுகளைக்கொண்டு ஏனைய அறங்களையும் ஆற்றவேண்டுமெனத்துணிந்தோம். இதற்கு காலமும் கனிய வேண்டும். இறைவன் திருவருட் துணைகளும் வேண்டும். இறைவனையே என்றும் துணையாகவேண்டி கண்ணீர் சிந்தி, வழிபடும் சிவத்தமிழர்களது கொடைகளும், துணைகளும், பிரார்த்தனைகளும் வேண்டும். இல்லத்தரசிகளின் மெய்யுணர்வோடு இணைந்த புனிதகரங்களினது தர்மங்களும் வேண்டும். எவ்வளவு விரைவாக இவை சேர்கின்றதோ அவ்வளவு விரைவாக முப்பத்திரண்டு அறங்களும் செயற்படும். இதற்காகவே மாவையாதீனமும் முன்னின்று கருமங்கள் பலதையும் தொண்டர்சபைமூலம் ஆற்றுப்படுத்துகிறது. நேரகாலங்களைப்பாராது சிரமங்களைப்பொருட்படுத்தாது சிவநெறிச் செல்வர்களான மாவையாலய மஹேஸ்வரபூசைத் தொண்டர் சபையினரது அயராது இயங்கும் சேவைகளை நாடு நன்கறியும்

தினமும் விசேஷமாக பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் மற்றும் விசேஷ தினங்களிலும் மஹேஸ்வரபூசையின் செயற்பாடுகள் வளர்ந்துகொண்டே சிறப்படைகின்றன. ஆலய பூசைவழிபாடுகளில் கலந்துவிட்டு, ஆறியமர்ந்து எம்பெருமானது பிரசாதங்களான அன்னதான அமுதைப் பெற்று, அதனால் பசியையாற்றி முகமலர்ச்சியோடு நல்லாசிகூறி வாழ்த்தும் அவர்களது வதனங்களில்கூட இறைவன் சாயல்களைக் கானமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை நடைமுறைப்படுத்த தர்மவான்களது தர்மச்செயல்களும் நிதிபொருள் உதவிகளும் உடலுதவிகளும் உதவினிற்கின்றன. இயங்கும் அன்னதான செயற்பாடுகளில் அன்பர்கள் தாமாகவே முன்வந்து நிகழ்வுகளை தாமாகவே முன்னெடுக்க உதவிகளும் ஆற்றுகின்றார்கள். இத்தகைய செயற்பாடுகள் காலஞ்செல்லச்செல்ல உயர்வுகொண்டு நல்லறம் வளரும் நன்னிலமாக இந்நாடே மாற்றமடையும் என்பது உறுதி.

மாவையாலய மஹேஸ்வர பூசைகட்கு ஆதரவளித்து ஆற்றுப்படுத்திய யாபேரும் உண்மையில் சிவபுண்ணிய செல்வர்களேயாவர். மாவைக்கந்தசுவாமியாரது திருவருள் இவர்கட்கெல்லாம் சொரிந்துகொள்ள வேண்டுமென யான் தினமும் பிரார்த்திப்பேன். சிவபுண்ணியம் வளர்வதாகுக.

சர்வஜித் வருடம் மஹேஸ்வரபூசை அறிக்கையை சிவபக்தர்களது கரங்களில் சபையினர் தருகிறார்கள். பெற்று மகிழ்ந்து இன்புறுவீர்களாக.

சுபம்

**மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்**

மவையாதீனகர்த்தா - பிரதமகுரு

*சர்வதாரி ஸ்ரீ*

*சித்திரை மீ 4ம் நாள்*

புதவாரம்

(16-04-2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் பதிய வேண்டியவை

சிவபெருமானை முழுமுதற்கடவுளாக வழிபடுபவர்களே சைவர்கள். அச்சைவர்களுள் சிவனடியார்கட்கு தொண்டுகள் பூண்டு வாழ்பவர்களே சிவதொண்டர்கள். தொண்டர்களது தொண்டுகளோ பெருமைமிக்கது. இவர்களது பெருமைகளை சிவபெருமானே செப்பியுள்ளார்.

**"பெருமையால் தம்மை ஒப்பார், பேணலால் எம்மைப் பெற்றார்,**
**ஒருமையால் உலகை வெல்வார், ஊனம்மேல் ஒன்றுமில்லார்,**
**அருமையாம் நிலையில் நின்றார்,அன்பினால் இன்பம் ஆர்வார்,**
**இருமையும் கடந்து நின்றார் இவரை நீ அடைவாய்"**

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு சிவத்தொண்டர்களைப் பற்றித் திருவாய்மலர்ந்தருளப்பட்டது. சேக்கிழார்கூட

*"கேடும் ஆக்கமுங் கெட்ட திருவினர்*
*ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்*
*கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி*
*வீடும் வேண்டா விறலின் விளங்கினர்."*
*"ஆரும் கண்டிகை, ஆடையுங் கந்தையே,*
*பாரம் ஈசன் பணியல தொன்றிலார்,*
*ஈர அன்பினர், யாதுங் குறைவிலார்*
*வீரம் என்னால் விளம்புந் தகையோ"*

எனச் சிவத்தொண்டர்களதும் சிவனடியார்களதும் உண்மைத் தன்மைகளை எடுத்துக்காட்டியுள்ளார். அறங்கள் முப்பத்திரண்டென அறிகினும், எல்லாவற்றிற்கும் மேலானது அமுது கொடுத்தலேயென, இராமலிங்க சுவாமிகள், விபுலானந்தர், ஆறுமுகநாவலர், பண்டிதர் கணபதிப்பிள்ளை, கணேசையா, நவநீதகிருஸ்ண பாரதியார்என்போர் கூட அதனை வலியுறுத்தியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியில் பிறந்தவர்கள் பெறும் பயன்களுள் அன்னமிட்டதனாலய அறமே தலையானது. அதுவும் சிவனடியார்கட்கு அன்னமிடும் அறமே மிக மேலானது.

*"மண்ணினிற் பிறந்தார் பெரும்பயன் மதிசூடும்*
*அண்ணலா ரடியார்தமை அமுது செய்வித்தல்"*

என்றெல்லாம் மகா வாக்கியங்கள் உள்ளன. திருமூலர் தமது திருமந்திரத்திலும்

*"அகர மாயிர மந்தணர்க் கீயிலென்?*
*சிகர கோபுரஞ் செய்து முடிக்கிலென்?*
*பகரும் யோகி பகலூன் பலத்துக்கு*
*நிகரிலை என்பது நிச்சயம்தானே "*

என அமுதளித்தவர்களது பெருமையை அறியத்தந்துள்ளார். தொண்டு என்ற சிறப்பிற்கு ஆளாகுபவர்களை தொண்டர்களெனப் புராணங்கள் தரவுகள் தருகின்றன.

*"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்*
*மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்*
*மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை*
*குன்றாத உணர்வுடையோர் தொண்டராங் குணமிக்கார்"*

(சேக்கிழார்)

சிவதொண்டின் நிமித்தம் தொண்டர்களானோர் எங்கும் எதிலும் சிவமயத்தையே அறிவர். அகமகிழ்வோடும் முகமலர்வோடும் பக்தர்களை எதிர்கொண்டழைத்து அவர்கட்கு அறுசுவைகளுடன் நால்வகை உணவுகளை வழங்கி மனிதப்பிறவியாலாய பயனைப் பெறுவர். நன்கு பயிற்சிகொண்ட தொண்டர்களாலேயே இச்சிவ புண்ணிய சேவைகளை வளர்த்தெடுக்க முடியும். பெருந்தொண்டரான இளையான்குடிமாறநாயனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் வந்து வணங்கிவரும் அடியார்களைக் கண்டு வணங்கி,

*"கொண்டுவந்து மனைப்புகுந்து குலவுபாதம் விளக்கியே*
*மண்டு காதலி தாசனத்திடை வைத்தருச்சனை செய்தபின்*
*உண்டிநாலு விதத்திலாறு சுவைத்திறத்தன ஒப்பிலா*
*அண்டர் நாயகர் தொண்டரிசையி னமுதுசெய்ய அளித்துளார்"*

எனச் சேக்கிழார் கூறுவதை மனதிற் கொள்வது அவசியம்.

மஹேஸ்வரபூசைகட்கு ஓயாது உயிரூட்டும் சக்தி ஆலயங்களிலேயே உருவாகிறது. மஹேஸ்வர பூசைகளின் செயற்பாடுகட்கு துணைனின்று சிவபிரானது திருவருளுக்கு ஆளாகும் வாய்ப்பினையும் ஆலயங்கள்தோறும் நிகழும் மஹேஸ்வரபூசை தந்துனிற்கின்றது. ஆயிரமாயிரம் பக்தர்களது பாவ விமோசனங்கள்கூட மஹேஸ்வரபூசையில் பங்குகொள்வதனால் நிகழ்கிறது. ஆலய பூசைகள், விழாக்கள், ஆராதனைகளில் ஆழ்ந்து இணைந்து தரிசனம் பெற்றோர் அங்கு அவ்வப்போது நிகழும் மஹேஸ்வரபூசையில் இறைவன் பிரசாதம் என அமுதுண்டு, ஆனந்தித்து, பூரிப்போடிணைந்த வதனங்களில் எழும் முக மலர்ச்சிகளும், அகமலர்ச்சியால் வரும் ஆசியுரைகளும், எவரையும் தெய்வீக நிலைக்கு உயர்த்திவிடும் பாங்கால் சூழலும் உய்வடைகிறது. இவற்றின் பேறுகட்காகவே மாவைக்கந்தன் மஹேஸ்வரபூசை தொண்டர் சபை தமது தெய்வீகப்பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கும் சிவ தர்மத்தை மேற்கொண்டு வருகின்றது. 1997ம் ஆண்டிலிருந்தே மேற்படி தொண்டர் சபை சிறு சிறு சேவையாக ஆரம்பித்து இப்பணி இப்போது பெரும் தொண்டுச் சேவைகட்கு இடமாகிவிட்டது. இதுவரை மாவையாலயம் வந்து முருகப்பெருமானது பூசை உற்சவ வழிபாடுகளில் கலந்து எமது மஹேஸ்வரபூசையிலும் இணைந்து அமுதுகொண்டோர் தொகை இலட்சம் அடியார்கள் என்ற இலக்கில் வளர்ந்துள்ளது. இத்தகைய வளர்ச்சிக்கு சிவ பக்தர்கள் முன்வந்துதவிய நிதி, பொருள், ஆசிகள், ஆற்றுப்படுத்தல்கள் என்பன உறுதுணையாக அமைந்ததே அதிவிசேஷ புண்ணிய தர்மமாகும்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் தெற்குத் தேரோடும் வீதியோரமாக அமைந்துள்ள **"ஸௌஜன்யா"** மண்டபமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹேஸ்வரபூசையின் உயிர்நாடி மண்டபமாக நிலைகொண்டிருக்கின்றது. உற்ஷவ காலங்களில் கூடும் அடியார்களது தேவைக்கான இடவசதி இங்கு போதியதாக இல்லை. இம்மண்டபத்தின் கிழக்கோரமாக 100 அடிநீளம் 30 அடி அகலம்கொண்டதோர் நீள் மண்டபம் அமைக்க உத்தேசித்து அதற்கான ஆயத்தங்கள் ஆரம்பமாகின்றன. இன்றைய காலநிலையில் கட்டிட நிர்மானத்திற்கு நிதிதான் தட்டுப்பாடாக அமைகின்றது. இந்த புண்ணிய தர்மத்திற்கு வசதியுள்ளோர் தாமாகவே முன்வந்து இம்மண்டபத்தை விரைவில் நிறுவ உதவுவார்களேயானால் அதுவும் சிவ புண்ணிய செயலாகி ஆயிரமாயிரமாகக்கூடும் பக்தர்களினது ஆசியினால் உதவியளித்தோரும் பக்தர்களது ஆசியோடு முருகப்பெருமானது திருவருளும் பெற்றுய்வர் என்பது திண்ணம். தர்மமும் துணை நிற்கும்.

இங்கு இப்போ தினமும் மஹேஸ்வரபூசை இடம்பெறவேண்டிய சூழ்நிலை வந்துள்ளது. வெள்ளிக்கிழமைகள்தோறும் மற்றும் உற்ஷவ தினங்களிலும் கூடுதலானோர் கூடுவது வழமையாயிற்று. மஹோற்ஸவ காலங்களிலும் பக்தர்களது சமூகம் அதிகரித்துக்கொண்டே வளர்கிறது. அவர்கட்கெல்லாம் தொண்டர்கள் தாகசாந்தி, அன்னதானம் வழங்கி ஆதரிப்பதும் ஓர் தவச்செயலாகிவிட்டது.

சர்வஜித் வருடம் (01.05.2007 - 30.04.2008) வரையுள்ள காலப்பகுதிகளில் இடம்பெற்ற அன்னதான நிகழ்வுகளிற்கு உதவிய சிவோத்தமர்களது விபரங்கள் அறியத்தருவதில் யாம் எமது பணியையும் ஆற்றுகின்றோம். உதவியோர்கட்காக யாம் முருகனை நினைத்து மாவைக் கந்தனது திருவருள் இவர்கட்கெல்லாம் இணையவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

நாட்டின் திடீர் நிகழ்வுகளால் ஏற்படும் தாக்கங்கள் மக்களையும் அணுகுவதால். அதனால் அல்லல்பட்டு அழுது ஆற்றாது எம்மிடம் அணுகுபவர்கட்கும் எம்மால் இயன்ற சேவைகளையும் ஆற்றிவருகின்றோம். இவைதொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஹேஸ்வர பூசைத் தொண்டுகளை, தொண்டர்கள் செயற்படுத்துங்காலை பக்தர்கள்கூட தாமாகவே முன்வந்து உணவுப் பதார்த்தங்களைத் தந்துதவி தத்தமது மூதாதையர், தம்மை விட்டுப்பிரிந்தோரது ஞாபகார்த்தமாக அவர்களது ஆத்மசாந்தியின் பொருட்டும் ஆலய ஆராதனைகளோடு அன்னதான நிகழ்வுகளையும் ஏற்று உதவினர். இப்பணி தொடரவேண்டுமென்பதே எமது விருப்பம். இது அவசியமுமாகிறது.

பக்தர்கள்கூட எம்மோடிணைந்தும், எமக்கு உதவிதந்து உற்சாகப்படுத்தியும், தக்க தருணங்களில் தேவையான சரீர உதவிகளைத் தந்து ஆற்றுப்படுத்தியமையும் என்றுமே மறக்க இயலாது. எமது தொண்டர் சபையினர் இவர்கட்கெல்லாம் நன்றிகள்கூறி மாவைக் கந்தனது திருவருள் இவர்கட்கெல்லாம் இனிதாக இணைய வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றோம் வழமைபோல் சிவபக்தர்கள் அனைவரும் தத்தம் இயல்புக்கேற்றவாறு இவ் மகேஸ்வரபூசை தொடர்ந்தும் வெகு உற்சாகமாக முன்னெடுக்க உதவுமாறு வேண்டி, புண்ணியதர்ம சேவைகட்காளாகி முருகப்பெருமானது திருவருளுக்குமாளாகுக என வேண்டுகின்றோம்.

*மேன்மைகொள் சைவநீதி விளங்குகஉலகமெலாம்*

**சி. கணேசலிங்கம்**
பொறுப்பாளர்
மாவைக் கந்தன் மாஹேஸ்வரபூசைத்
தொண்டர் சபை

**பணிப்பாளர்கள்**
அ. ஆனந்தசிங்கம்
வ. இரத்தினம்
க. சிவலிங்கம்
பெ. லம்போதரன்
இ. சாந்தி

**மஹாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள்**
மேலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாஹேஸ்வரபூசை (ஓர்விளக்கம்)

மாஹேஸ்வரர் என்போர் பார்வதி பரமேஸ்வரரை வழிபடுவோர் ஆவார். ஆசார்யர், தீட்சைபெற்றோர் யாவரும் ஈஸ்வரரேயாவர். எவர் மாதா பிதா குரு தெய்வம் ஆகியோரைத் தினமும் சிவசக்திமயமென வழிபடுகின்றார்களோ அவர்களும் மாஹேஸ்வரர் ஆவார். சிவ பக்தர்களை சங்கமத்தினர் எனவும் அழைக்கப்படுவர். மாஹேஸ்வரனாக காணப்படுபவரிடமுள்ள அன்பினால்தான் அவ்வன்பினூடாக சிவபிரானை உணர முடியும். அத்தகைய உணர்வுகள்தான் மனிதனை மனிதனாக வாழவும் ஆற்றுப்படுத்தினிற்கும் இதனை "ஈசனுக்கு அன்பிலார் அடியவர்க்கு அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்" என்றார் அருணந்தி சிவாச்சாரியார்.

புண்ணியங்களுள் சிவபுண்ணியமே சிறந்தது. சிவபுண்ணியங்களுள் சிவபூசை முதன்மையாகிறது. சிவபூசையினுஞ் சிறந்தது மாஹேஸ்வரபூசை. மாஹேஸ்வரர்களை விதிப்படி பூசித்து அவர்கட்கு உபசாரங்களால் மகிழ்வித்து அவர்களிடம் சிவசமயத்தைக்கண்டு திருவமுது செய்வித்து, அவர்களது மலர்ந்த வதனங்களினால் பெறும் ஆசீர்வாதங்களே மாஹேஸ்வரபூசையின் தத்துவார்த்தமாகும். பக்தியோடும் பாசத்தோடும் அழைத்து அவர்கட்கு விபூதி பிரசாதங்கள் உதவி, ஆலய வழிபாடுகளில் ஈர்த்துவிட்டு, அவ்வழிபாடுகளினால் உண்டான திருவருட்திறனைக் கொண்டவர்களே மாஹேஸ்வரராவர். இதனால்தான் ஆலயவளாகங்களில் மாஹேஸ்வர பூசைகள் ஆரம்பமாகின. திருவமுது செய்வித்தலே மாஹேஸ்வரபூசையின் உள்ளார்ந்த தொண்டு. இத்திருவமுதுகூட அறுசுவைகளோடு தயாரித்து இறைவனுக்கு முன்னதாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்துவிட்டு, மானசீகமாக உலகினருக்கும் சேருமாறு பூசித்துவிட்டு நால்வகையான உணவுடன், சுவாமி தரிசனங்களுள் பேறுபெற்ற சிவனடியார்கட்கு விருந்தாக ஊட்டுவிக்க வேண்டும். அறுசுவையானது கைப்பு, புளிப்பு, தித்திப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு என்றும், நால்வகை உணவானது உண்ணப்படுவது, தின்னப்படுவது, நக்கப்படுவது, பருகப்படுவது எனவும் நூல்கள் தரவுகள் தருகின்றன. தரிசனங்களாலும், இறைநினைவுகளாலும், அடியார்களது மனதின்கண் தேங்கும் அமைதி, ஆனந்தம், உற்சாகம் அனைத்தையும் மாஹேஸ்வரபூசையின் விருந்துபசாரத்தின்மூலம் அவை வீறுகொண்டெழுந்து மனதை ஒருங்கிணைத்து ஆத்ம சக்தியை வலுவூட்டினிற்குமென வேதசிவாகமங்கள் அறியத்தருகின்றன. நாயன்மார்களுள் இளையான்குடிமாறநாயனார் அடியார்களைத் தேடித்தேடிக்கண்டு அழைத்து மாஹேஸ்வரபூசையை அபரிமிதமாக மேற்கொண்டதை சேக்கிழார் பெருமான்,

*"ஆரம் அன்பு புனைந்த ஐயர்தம் அன்பரென்பதோர் தன்மையால்*
*நேரவந்தவர் யாவராயினும் நித்தமாகிய பக்திமுன்*
*கூரவந்தெதிர் கொண்டுகைகள் குவித்துனின்று*
*பரிவெய்த முன்னுரை செய்தபின்*
*கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே*
*மண்டுகாதலின் ஆசனத்திடை வைத்தருச்சனை செய்தபின்*
*உண்டிநாலு விதத்திலாறு சுவைத்தித்தினில் ஒப்பிலா*
*அண்டர் நாயகர் தொண்டரிசையில்*
*அமுது செய்ய அளித்துளர்"*

என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரத்தில்கூட திருமூலர்

**"படமாடக் கோயிற் பரமற்கொன்றீயின்**
**நடமாடுங் கோயில் நம்பற்கங்காகா**
**நடமாடுங் கோயில் நம்பற்கொன்றீயின்**
**படமாடுங் கோயில் பரமற்கங்காமே"**

**என்றும்**

**"தண்டறு சிந்தைத் தபோதனர் தாம் மகிழ்ந்து**
**உண்டது மூன்று புவனமும் உண்டது**
**கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்ற**
**எண்திசை நந்தி எடுத்திசைத்தானே"**

என மாஹேஸ்வரபூசையின் சிறப்பியல்புகளை எமக்கு அறியத்தந்துள்ளார்.

அனந்தகோடி புண்ணியம் ஆலய வளாகங்களில் இடம்பெறும் வழிபாடுகள், ஆராதனைகளோடு மாஹேஸ்வரபூசையில் இணைந்து கொள்ளும் அடியார்பெருமக்கட்கும், இதனை முன்னெடுத்துச் சிறப்பாக இயக்கும் தொண்டர்கட்கும், இதனை நிலைபெறச்செய்து தொடர் நிகழ்வாக ஆற்றுப்படுத்தினிற்கும் சிவபுண்ணிய சீலர்கட்கும், அவர்களை அறியாமலேயே சிவனருள் இணைந்துனிற்குமென நந்திதேவர்கூட அறியத்தந்துள்ளார். நாயன்மார்களும் அறிஞர்களும்கூட இதனை உறுதிசெய்துள்ளதை ஞாலம் நன்கறியும்.

உலகம் உய்ய, நாமுய்ய, நற்தொண்டுகளும், நற்சமுதாயமுமுய்ய மாஹேஸ்வரபூசைகள்தான் உதவினிற்கும் என்பதில் ஐயமேதுமில்லை.

**மாவை சு. நவனீதகிருஷ்ண பாரதியார்,**

(1943ம் ஆண்டு சைவமகாசபை ஆண்டுவிழாவின்போது கூறியவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலுக்கு ஊதியம் சேர்ந்தால் போதுமா? உயிருக்கு அதனைச் சேர்க்கவேண்டும்!

நாம்உடலுக்குப் பொருள் தேட எவ்வளவு பாடுபடுகின்றோம். இரவுபகல் பாராது முயற்சி செய்கின்றோம். வெளிநாடு சென்று அந்நாட்டுத்தட்பவெப்ப நிலையைச்சகித்து மனைவி மக்களின் பிரிவுத்துயரைச் சுமந்து அயராது உழைக்கின்றோம். அந்தச்செல்வம் எல்லாம் உடலுக்காகவே அந்தச் செல்வம் நாம் இறந்தபின் பிள்ளைகளைச் சென்றடையும். பிள்ளைகள் இல்லையானால் இருக்கிள்ற பங்காளிகள் பங்கிட்டுக்கொள்வார்கள். அப்படியானால் எப்படித்தான் உயிருக்குச் செல்வம் சேர்ப்பது? அதற்கு வழி திருவள்ளுவர் கூறுகின்றார்.

***"ஈதல் இசைபாட வாழ்தல் அது அல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு"*** - என்றார்.

வறியவர்களுக்குக் கொடுத்தலும் அதனால் ஏற்படும் புகழும் உயிருக்கு ஊதியம் என்கிறார். கொடுத்ததினால் உண்டாகும் புண்ணியம் பல பிறவிகளுக்கும் உயிரைத்தொடரும். கொடுத்ததினால் ஏற்படும் புகழ் இம்மைப் பயனாக நின்று நிலைக்கும்.

பொருள் தேடியவன் பொருளை உயிரோடு தொடர்வதற்குச் சேமிக்கும் இடம் எது என்பதையும் திருவள்ளுவர் விளக்குகிறார். வங்கியில் வைத்த பணம் உயிரைத்தொடராது. ஆனால் பசித்தவர்க்கு உணவுகொடுத்துப் பசி தீர்த்த பணம் புண்ணியமாகமாறி உயிரைத் தொடரும் என்கிறார். பணம் உயிரைத்தொடர வேண்டுமானால் பாதுகாப்பாக வைக்க வேண்டிய இடம் பசித்தவர் வயிறு என்கிறார்.

***"அற்றார் அழி பசிதீர்த்தல் அஃதொருவன்***
***பெற்றான் பொருள்வைப் புழி"***

-என்கிறார்.

வறியாரது மிக்க பசியை அறம் கருதி நீக்குங்கள். பொருள்பெற்றான் ஒருவன் அதனைத் தனக்கு உதவவைக்கும் இடம் அந்தஅறமே என்கிறார். திருவள்ளுவருடைய அற உரையை-அறிவுரையை இவ்வுலகில் பின்பற்றுவோர் இருக்கிறார்களா! இருந்தார்களா! இருப்பார்களா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளுவர் வழியில் பெருஞ்சித்திரனார்

பெருஞ்சித்திரனார் என்ற புலவர் குமணவள்ளலைப் பாடினார். தமிழறிந்த குமணவள்ளல் பெருஞ்சித்திரனாருக்கு பெரும் பொருள் கொடுத்தார். அந்தப்பொருளைப்பெற்றுவந்த பெருஞ்சித்திரனார் தன்னுடைய மனைவியிடம் அதனைக் கொடுத்தார். வீட்டில் சேமித்துவைக்குமாறு அவர் அறிவுரை கூறவில்லை. உயிரைத்தொடரும் ஊதியமாகும்படி வழங்கச்சொன்னார்.

தம்முடைய துணைவியைப்பார்த்து "என் மனைக்கு உரியவளே! குமணவள்ளல் வழங்கிய பெருஞ்செல்வத்தை பாதுகாத்து வைத்துக்கொள்ளலாம்! வைத்துக்கொண்டால் வசதியாக வாழலாம்! என்று சேமித்து வைக்காதே!

"உன்னை விரும்புவோருக்கும் கொடு. நீ விரும்புவோருக்கும் கொடு. சுற்றத்தோருக்கும் கொடு. எமது பசி நீங்க முன்னர் உதவியோர்க்கும் கொடு. யார் யாருக்கு கொடுப்பது என்று என்னைக் கேளாமலேயே கொடு" என்று கூறினார்.

உயிருக்கு ஊதியப் பொருளைப் பயன்படுத்தத்தெரிந்த பெருஞ்சித்திரனார் பாடல் இதோ:

நின்நயந்து உறைநர்க்கும் நீ நயந்து உறைநற்கும்
யன்மாண் கற்பின் கிளை முதலோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது
வல் லாங்கு வாழ்த்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் தகாடுமதி மனைகிழவோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கியவளனே!

*இஃது 20-01-2008ல் உதயனில் பிரசுரமானது*

**ஆக்கம் : மாவை புலவர் ம. பார்வதிநாதசிவம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸர்வஜித் வருடம் அன்னதானங்கட்கு உணபுப்பதார்த்தங்கள் தாமாகவே தந்துதவிய பக்தர்களது விபரங்கள்

| | | |
|---|---|---|
| வி. ஹரிகரன் (பிரான்ஸ்) | - | கொல்லங்கலட்டி |
| ஆதீனகர்த்தா குடும்பத்தினர் | - | மாவிட்டபுரம் |
| ஆம்பலவானர் ஆனந்தசிங்கம் | - | மாவிட்டபுரம் |
| S.கணேஸ் ஶ்ரீஸ்கந்தராசா | - | வசாவிளான் |
| தி.கனகசபை (கிளி) | - | ஏழாலை |
| க. சோதிராசா | - | புன்னாலைக்கட்டுவன் |
| சி.கணேசலிங்கம் | - | தெல்லிப்பழை |
| பொ.பாலசிங்கம் | - | கொல்லங்கலட்டி |
| பழனிவேல் | - | தெல்லிப்பழை |
| க.பாலசிங்கம் | - | கொல்ங்கலட்டி |
| ஆ.மயில்வாகனம் | - | இணுவில் |
| மு.அருளையா | - | மல்லாகம் |
| அ.கருணதாஸ் | - | கொல்லங்கலட்டி |
| சு.குகதேவன் | - | தெல்லிப்பழை |
| சி.அசோக்குமார் | - | புன்னாலைக்கட்டுவன் |
| ஆ.ஜனார்த்தனன் | - | தெல்லிப்பழை |
| சபாபதி | - | மயிலிட்டி |
| க.துரைசிங்கம் | - | சுழிபுரம் |
| சிவபாதசுந்தரம்(பச்சை) | - | சுன்னாகம் |
| தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் | - | தெல்லிப்பழை |
| சி.பாலசிங்கம் | - | விழிசிட்டி |
| சி.கனகரட்ணம் | - | மயிலிட்டி |
| சின்னையா | - | இணுவில் |
| திருமதி.ம.சின்னத்துரை | - | பண்ணாலை |
| M.P.பாலகிருஷ்ணன் | - | அளவெட்டி |
| சி.மகேஸ்வரன் | - | மாவிட்டபுரம் |
| க.சூர்யகுமார் | - | சுழிபுரம் |
| சி.சிவராசசிங்கம் | - | மயிலிட்டி |
| Dr. மகேசன் | - | உடுவில் |
| க.குகதாசன் | - | மாவிட்டபுரம் |
| அருளானந்தம் | - | மல்லாகம் |
| த.கருணாகரன் | - | மாவிட்டபுரம் |
| செ.ஜெயக்குமார் | - | மயிலிட்டி |
| சத்யநாதன் | - | மாவிட்டபுரம் |
| தி.புஸ்பராணி | - | சுழிபுரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சி.சுந்தரலிங்கம் | - | மாத்தனை |
| சி.சிவராசா | - | மாத்தனை |
| சே.சயந்தன் | - | மாவிட்டபுரம் |
| தி.சுமதி | - | மயிலிட்டி |
| சிவசோதிலிங்கம் | - | பன்னாலை |
| 19ம் திருவிழா உபயகாரர் | - | தெல்லிப்பழை |
| வடக்குகிழக்கு ஏழாலை சிவபக்தர்கள் | - | ஏழாலை |
| குருதேவன் | - | வீமன்காமம் |
| சி.அருண் | - | மல்லாகம் |
| ந.தங்கம்மா | - | மாவிட்டபுரம் |
| வே.மகேஸ்வரன் | - | மாவிட்டபுரம் |
| சிவனடியார் ஒருவர் | - | |
| நா.கௌரீதரன் | - | கீரிமலை |
| சிவமூர்த்தி | - | அளவெட்டி |
| மு.சுப்பிரமணியம் | - | |
| சி.ராகுலன் | - | |
| பரஞ்சோதி மாஸ்டர் | - | கொல்லங்கலட்டி |
| ச.சிவதாசன் | - | கொல்லங்கலட்டி |
| ச.வைரவப்பிள்ளை | - | கொல்லங்கலட்டி |
| திருக்கார்த்திகை உபயகாரர் | - | காங்கேசன்துறை |
| 515 B.D.E இராணுவத்தினர் | - | காங்கேசன்துறை |
| பொலிஸ் பகுதியினர் | - | காங்கேசன்துறை |
| ஸ்கந்தசஷ்டி பாறணை உபயகாரர் | - | உடுவில் |
| த.குமாரசாமி | - | உடுவில் |
| இ.பேரின்பநாயகம் | - | ஏழாலை |
| அருந்தவநாயகம் | - | மல்லாகம் |

# உபகரணங்கள் தந்த பக்தர்கள் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | க. சிவசோதிலிங்கம் | பன்னாலை | 8 பாய்கள், 7 அகப்பைகள் |
| 2. | சி. சிவலிங்கம் | தெல்லிப்பழை | 9 அகப்பைகள், 1 தேயிலைவடி |
| 3. | வ. கணபதிப்பிள்ளை | மயிலிட்டி | 2 கேற்றில்கள் |
| 4. | சி. உதயகாந்தன் சுதா | மாவிட்டபுரம் | 50 டம்ளர்கள் |
| 5. | பாலசுப்பிரமணியம் | விழிசிட்டி | 2 எவர்சில்வர் வாளிகள் |
| 6. | வ. இரத்தினம் | தெல்லிப்பழை | 2 எவர்சில்வர் வாளிகள் |
| 7. | அ. ஆனந்தசிங்கம் | மாவிட்டபுரம் | எவர்சில்வர் கிண்ணங்கள் |
| 8. | குருதேவன் | வீமன்காமம் | 1 கிடாரம் |
| | | | 10 எவர்சில்வர் வாளிகள் |
| | | | 1 பிளாஸ்ரிக் பேசின் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகேஸ்வர பூசைக்காக நிதியுதவி புரிந்தோர் விபரம்

| பெயர் | முகவரி | ப. சீட்டு இல. | தொகை |
|---|---|---|---|
| திலகவதி கந்தசாமி | கொல்லன்கலட்டி | 522 | 3000.00 |
| M. Pussele A.S.P | கொழும்பு | 523 | 500.00 |
| பராசக்தி பரமேஸ்வரன் | அவுஸ்திரேலியா | 524 | 1500.00 |
| வி.பெரியதம்பி வி.கந்தையா சகோதரர்கள் | மாவிட்டபுரம் | 525 | 2000.00 |
| ச.கந்தையா | தெல்லிப்பழை | 526 | 1000.00 |
| த.சிவபாலசுப்ரமணியம் | சுன்னாகம் (U.K) | 527 | 2000.00 |
| நா.சந்திரலிங்கம் | சுதுமலை | 528 | 1000.00 |
| செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி | காங்கேசன்துறை | 529 | 1500.00 |
| திருமதி சதாசிவம் குடும்பம் | வீமன்காமம் | 530 | 5000.00 |
| சிங்க அரியரட்ணம் | வட்டுக்கோட்டை | 531 | 1000.00 |
| திருமதி. செல்லம் நடராசா | கொல்லங்கலட்டி (U.K) | 532 | 2000.00 |
| குருநாதபிள்ளை உடையார் வம்சாவழி | வீமன்காமம் | 533 | 1000.00 |
| ப.தியாகராசா நடராசலிங்கம் | அவுஸ்திரேலியா(மாவிட்டபுரம்) | 534 | 2000.00 |
| க.சிவநேசன் | கனடா(மாவிட்டபுரம்) | 535 | 5000.00 |
| த.க. கதிர்காமநாதன் | நல்லூர் | 536 | 1000.00 |
| Dr.T.இராசேந்திரம் | காங்கேசன்துறை | 537 | 1000.00 |
| பவானி இராபஜசிங்கம் | U.K | 538 | 2000.00 |
| பராசக்தி பரமேஸ்வரன் | அவுஸ்திரேலயா | 539 | 2000.00 |
| இ.சோமசுந்தரம் குடும்பம் | கொல்லங்கலட்டி | 540 | 3300.00 |
| திலகவதி கந்தசாமி | கொல்லங்கலட்டி | 541 | 1000.00 |
| திருமதி.மா.கனகசபை குடும்பம் | மாவிட்டபுரம் | 542 | 1100.00 |
| கானமயில்நாதன் | யாழ்ப்பாணம் | 543 | 2000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ச.அம்பலவானர் | மாவிட்டபுரம் | 544 | 1000.00 |
| திருமதி.புவனேஸ்வரி சின்னத்துரை | பன்னாலை | 545 | 1000.00 |
| அப்புத்துரை புவனேஸ்வரி | மாவிட்டபுரம் | 546 | 2000.00 |
| தங்கம்மா அப்பாக்குட்டி | துர்க்கையம்பாள் ஆலயம் | 547 | 10000.00 |
| திருமதி.சதாசிவம் குடும்பம் | வீமன்காமம் | 548 | 5000.00 |
| ந.கேதீஸ்வரன் குகனேசன் சகோதரர்கள் | மயிலிட்டி (U.K) | 549 | 2000.00 |
| திருநாவுக்கரசு குடும்பம் ஈசன் | மயிலிட்டி | 550 | 5000.00 |
| க.உமாகரன் | சுன்னாகம் | 551 | 1000.00 |
| க.சிவசுப்ரமணியம் | திருநெல்வேலி | 552 | 1000.00 |
| குணராசசிங்கம் | மல்லாகம் | 553 | 1000.00 |
| நவநீதராசா குடும்பம் | மாவிட்டபுரம் (கனடா) | 554 | 5000.00 |
| சி.மு.சுப்ரமணியம் | உடுவில் | 555 | 500.00 |
| வே.த.சிவசுப்ரமணியம் பவானி | கட்டுவன் | 556 | 1500.00 |
| ஆனந்தகுமாரசாமி ராகவன் | உரும்பிராய் | 557 | 500.00 |
| Dr.M.மகேசன் | உடுவில் | 558 | 1250.00 |
| சீ.முருகையா | சுன்னாகம் | 559 | 1000.00 |
| சின்னத்துரை இரத்தினம் | பண்டத்தரிப்பு | 560 | 1000.00 |
| ரேகா சிவசுப்ரமணியம் | சங்கானை | 561 | 1000.00 |
| திருமதி.சிவநேசன் | தெல்லிப்பழை | 562 | 500.00 |
| வரதராசா | தெல்லிப்பழை | 563 | 200.00 |
| சு.கணேசன் | வசாவிளான் | 564 | 1000.00 |
| செல்வி.சு.உஷா | மாவிட்டபுரம் | 565 | 2000.00 |
| தவமணி அழகரட்ணம் | இளவாலை | 566 | 1000.00 |
| ச.பாலச்சந்ரன் | மாவிட்டபுரம் | 567 | 1000.00 |
| வைரமுத்து திருவிளங்கம் | தெல்லிப்பழை | 568 | 500.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சரவணமுத்து பத்மினிதேவி | சுன்னாகம் | 569 | 1000.00 |
| சபாபதி அன்னப்பிள்ளை | சண்டிலிப்பாய் | 570 | 1000.00 |
| நடேஸ்வராக் கல்லூரி | காங்கேசன்துறை | 571 | 1000.00 |
| சண்முகம் ஜெயராசன் | கொல்லங்கலட்டி | 572 | 1100.00 |
| பாலசுப்ரமணியம் தெய்வானை | மாவிட்டபுரம் | 573 | 300.00 |
| S.மங்கையற்கரசி | தெல்லிப்பழை | 574 | 1000.00 |
| நடராசா குடும்பம் | கொடிகாமம்(மாவை) | 575 | 1000.00 |
| தி.சண்முகலிங்கம் | கொல்லங்கலட்டி | 576 | 1000.00 |
| க.துரைசிங்கம் | சுழிபுரம் | 577 | 1000.00 |
| சு.சோதிலிங்கம் | கொல்லங்கலட்டி | 578 | 2000.00 |
| திரு.சச்சிதானந்தம் | அம்பனை | 579 | 1000.00 |
| ரகு குடும்பம் | தெல்லிப்பழை | 580 | 1000.00 |
| யூனியன் கல்லூரி | தெல்லிப்பழை | 581 | 1000.00 |
| செ.ஞானசேகரம்பிள்ளை | மாவிட்டபுரம் | 582 | 2000.00 |
| ப.பரராசசிங்கம் | மாவிட்டபுரம் | 583 | 2000.00 |
| தி. ஆறுமுகம் | தையிட்டி | 584 | 1000.00 |
| க.சிவபாலசுந்தரம் | தெல்லிப்பழை | 585 | 201.00 |
| தி.கனகசபை | தையிட்டி | 586 | 1000.00 |
| சு. ஸ்ரீகுமரன் | சுன்னாகம் | 587 | 1000.00 |
| வி.துரைராசா | தெல்லிப்பழை(U.K) | 588 | 1000.00 |
| கி.சண்முகராசா | கொல்லங்கலட்டி(கனடா) | 589 | 6000.00 |
| திரு.திருமதி.பூ.குகதீசன் | கனடா | 590 | 1000.00 |
| திரு.திருமதி.பூதப்பிள்ளை | கொல்லங்கலட்டி | 591 | 1250.00 |
| திருமதி.கோப்பருந்தேவி | கொல்லங்கலட்டி | 592 | 1250.00 |
| திரு.திருமதி.கணேசலிங்கம் | கொல்லங்கலட்டி | 593 | 1000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| S.R.சண்முகரட்ணம் | கொல்லங்கலட்டி | 594 | 1000.00 |
| K.ஜெகன்னாதன் | சுன்னாகம் | 595 | 1000.00 |
| நா.அற்புதராசா | ஏழாலை | 596 | 370.00 |
| சி.சுந்தரலிங்கம் | பன்னாலை(கனடா) | 597 | 1000.00 |
| க.திருநாவுக்கரசு குடும்பம் | பன்னாலை | 598 | 1000.00 |
| நடராசா அருமைச்செல்வநாயகி | தெல்லிப்பழை | 599 | 500.00 |
| நா.சரவணமுத்து | தெல்லப்பழை | 600 | 1000.00 |
| S.இராசரட்ணம் | கொழும்பு | 601 | 1000.00 |
| திருக்கார்த்திகை உபயகர்த்தாக்கள் | காங்கேசன்துறை | 602 | 5000.00 |
| பகீரதன் கவிதா | மல்லாகம் | 603 | 1000.00 |
| திருமதி.சங்கரப்பிள்ளை | மாவிட்டபுரம் | 604 | 1000.00 |
| ஷண்முகசுந்தரம அருள்முருகன் | மாவிட்டபுரம்(அவுஸ்திரேலியா) | 605 | 5000.00 |
| கந்தையா கணேசலிங்கம் | ஆனைக்கோட்டை | 606 | 1000.00 |
| திருச்செல்வி அச்சகம் | மானிப்பாய் | 607 | 200.00 |
| பூதப்பிள்ளை கமலநாதன் | தையிட்டி | 608 | 1000.00 |
| குணலிங்கம் சாந்தகுமார் | குப்பிளான் | 609 | 500.00 |
| இ.அம்பிகாபதி C.T.B சாரதி | மாசியப்பிட்டி | 610 | 500.00 |
| மஹாஜனாக்கல்லூரி | தெல்லிப்பழை | 611 | 1000.00 |
| சி.சிவசுப்ரமணியம் | அளவெட்டி | 612 | 500.00 |
| பா.பார்த்தீபன் | மாவிட்டபுரம் | 613 | 500.00 |
| திரு.திருமதி.பகீதரன் | தெல்லிப்பழை | 614 | 1000.00 |
| திரு.திருமதி.மகாலிங்கம் | கீரிமலை | 615 | 1000.00 |
| A.T.பொன்னுத்துரை குடும்பம் | குரும்பசிட்டி | 616 | 2000.00 |
| தம்பு சிவபாதசுந்தரம் | மாவிட்டபுரம் (U.K) | 617 | 3000.00 |
| மகாலிங்கம் குடும்பம் | மாங்கொல்லை | 618 | 5000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சு.முருகையா | தெல்லிப்பழை | 619 | 500.00 |
| பொ.சிவசோதிலிங்கம் | மாவிட்டபுரம் | 620 | 500.00 |
| வை.சந்ரபாலன் | வீமன்காமம் | 621 | 500.00 |
| மனோராஜா ஜெயந்தி | தெலலிப்பழை | 622 | 1000.00 |
| சிவரட்ணம் சிவச்செல்வச்சந்திரன் | மாவிட்டபுரம் | 623 | 1000.00 |
| சி.பாலசுந்தரம் | வீமன்காமம் | 624 | 500.00 |
| க.பாலசுநதரம் | வீமன்காமம் | 625 | 500.00 |
| கி.கார்த்திகா | வீமன்காமம் | 626 | 500.00 |
| க.பிரதீபன் | குப்பிளான் | 627 | 500.00 |
| சுந்தரமூர்த்தி மாஸ்ரர் குடும்பம் | தெல்லிப்பழை | 628 | 1000.00 |
| இ.தயாபரன் | கோண்டாவில் | 629 | 500.00 |
| செ.மகாதேவி பூமாதேவி | சுன்னாகம் | 630 | 1000.00 |
| ச.மருதாசலம் | தெல்லிப்பழை | 631 | 1000.00 |
| S.சிவப்பிரகாசம் | நல்லூர் | 632 | 500.00 |
| நா.சரவணமுத்து | ஆக்லேன் உடுவில் | 633 | 1000.00 |
| திருமதி.சதீஸ்குமார் | குப்பிளான் | 634 | 200.00 |
| க.கருனாகரன் | இழவாலை | 635 | 1000.00 |
| பெ.கனகசபாபதி | இணுவில் | 636 | 500.00 |
| திருமதி.பஞ்சாயுதன் சிவகலா | இணுவில் மேற்கு | 637 | 1000.00 |
| சேனாதிராசா சுதாகா | மாவிட்டபுரம் | 638 | 3000.00 |
| சி.சீவரட்ணம் | மல்லாகம் | 639 | 1000.00 |
| ம.பேரானந்தமூர்த்தி | மல்லாகம் | 640 | 500.00 |
| யா/வீமன்காமம் மகாவித்தியாலயம் | மாவிட்டபுரம் | 641 | 700.00 |
| S.சதீஸ்கண்ணா | சண்டிலிப்பாய் | 642 | 1000.00 |
| வே.பாலகிருஸ்ணன் | மாவிட்டபுரம் | 643 | 1000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| திரு.வே. பத்மலோஜினி | மாவிட்டபுரம் | 644 | 1000.00 |
| சு. சேந்தன் | மாவிட்டபுரம் | 645 | 1000.00 |
| பொ. செல்வராசா | தையிட்டி | 646 | 1100.00 |
| க. யோகேஸ்வரன் | சண்டிலிப்பாய் | 647 | 200.00 |
| பெ. லம்போதரன் | கொல்லங்கலட்டி | 649 | 1500.00 |
| லலிதா குமாரசிங்கம் | மல்லாகம் | 650 | 1000.00 |
| வ. ரவீந்ரசோதி | ஏழாலை வடக்கு | 651 | 500.00 |
| இ. ஞானரஞ்சன் | ஏழாலை | 652 | 2000.00 |
| குகநேசன் குடும்பம் | கொல்லங்கலட்டி | 653 | 1000.00 |
| த.மு. சிவகுமார் பிள்ளையார் | சண்டிலிப்பாய் | 654 | 500.00 |
| சி. கனகரட்ணம் | கயந்தப்பை தெல்லிப்பழை | 655 | 500.00 |
| ச. சதீசன் | கொக்குவில் | 656 | 500.00 |
| K. யதுசுதன் | கோண்டாவில் மேற்கு | 657 | 1000.00 |
| திருமதி. நடராசா | வீமன்காமம் | 658 | 500.00 |
| திருமதி ஆனந்தக்குமார் | வீமன்காமம் | 659 | 200.00 |
| அபிஷகின் பிரபாகரன் | மல்லாகம் | 660 | 500.00 |
| ம. செல்வபாக்கியலக்ஷ்மி | உடுவில் | 661 | 250.00 |
| ஜெ. ஹரிதாஸ் | கொல்லங்கலட்டி | 662 | 300.00 |
| வே. சதாமதி | கொல்லங்கலட்டி | 663 | 200.00 |
| நித்தியானந்தம் புஸ்பம் | ஏழாலை | 664 | 200.00 |
| S. சிவசோதிலிங்கம் | கொல்லங்கலட்டி | 665 | 1400.00 |
| தி. கனகசபை | தையிட்டி | 666 | 3000.00 |
| நா. சங்கரப்பிள்ளை | மாவிட்டபுரம் | 667 | 2000.00 |
| S.M.S. சரவணப்பிள்ளை | கொல்லங்கலட்டி | 668 | 1000.00 |
| ஜ. விஜயநாயகம் | தெல்லிப்பழை(அவுஸ்தி.) | 669 | 2500.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வே. சம்பந்தப்பிள்ளை | காங்கேசன்துறை | 670 | 1500.00 |
| கோசலா இராஜகுமார் | வீமன்காமம் | 671 | 1000.00 |
| ம. சங்கரப்பிள்ளை | துன்னாலை | 672 | 2000.00 |
| பொ. சத்யநாதன் | மாவிட்டபுரம்(சாயுடை) | 673 | 2000.00 |
| கந்தசாமி சபாரஞ்சன் | மாவிட்டபுரம் | 674 | 1000.00 |
| கலா சிவலிங்கம் | மாவிட்டபுரம் | 675 | 1000.00 |
| பரமேஸ்வரி நாகரட்ணம் | மாதனை, தெல்லிப்பழை | 676 | 1000.00 |
| மு. மகாதேவன் | காரைநகர் (U.K) | 677 | 2200.00 |
| சி. சிவநாயகம் | பன்னாலை | 678 | 500.00 |
| Muditha Pussella A.S.P | கொழும்பு | 679 | 500.00 |
| திருமதி கந்தையா | தெல்லிப்பழை | 680 | 500.00 |
| Muditha Pussella A.S.P | கொழும்பு | 681 | 500.00 |
| ச. ஈஸ்வரன் | தெல்லிப்பழை(South Africa) | 682 | 8000.00 |
| சீவரட்ணம் சிவச்செல்வசந்ரன் | மாவிட்டபுரம் | 683 | 1000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவுசெலவுகள் விபரங்கள்

## (01-04-2007 - 30-04-2008)

| | | |
|---|---|---|
| | **வரவுகள்** | |
| 1. | ஆரம்பகையிருப்பு - நிதி | 32333.00 |
| 2. | மாகேஸ்வரபூசைக்கு பக்தர்கள் நிதி அன்பளிப்பு | 225971.00 |
| 3. | பக்தர்கள் உதவிய உணவுப் பதார்த்தங்கள் பெறுமானம் | 220362.00 |
| | மொத்தம் | **478666.00** |

| | | |
|---|---|---|
| | **செலவுகள்** | |
| 1. | உற்ஸவகால மாகேஸ்வரபூசை செலவுகள் | 220362.00 |
| 2. | தினசரி மாகேஸ்வரபூசை செலவுகள் | 153363.00 |
| 3. | மில் கூலி | 370.00 |
| 4. | பிரயாணச் செலவுகள் | 697.00 |
| 5. | உபகரணங்கள் | 925.00 |
| 6. | மாகேஸ்வரபூசை சார்பான பலவகை உதவிகள் புரிந்தோர் சன்மானம் | 15000.00 |
| 7. | விறகு கொத்துக் கூலி | 15000.00 |
| 8. | அச்சகம் செலவுகள் | 21000.00 |
| | *மொத்தம்* | **426717.00** |
| | *கையிருப்பு* | **51949.00** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பணி விஞ்ஞாபனம்

இப்பூமியில் பிறந்தது அறம் வளர்த்தலே தம் அரும்பெரும் தொண்டென்ற இலட்சியங்களோடு வாழ்ந்த சைவச் சான்றோர்களின் வாரிசுகளாக பரம்பரையாக வாழ்ந்து வரும் உத்தம சீலர்களே!

மாவைக் கந்தப் பெருமானது திருக்கோவிலின் திருப்பணிகளுக்கு உங்களது திருக்கரங்களால் உதவி தந்து விரைவில் இத்திருப்பணிகள் நிறைவேற தங்களாலியன்ற உதவிகளை தந்துதவுமாறு இரந்து நிற்கின்றோம்.

முரிந்து வீந்தன உடைந்தன முதலிய
நெரிந்த வாசிய கோபுர நெடுமதலி பிறவும்
தெரிந்து முனையிற் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு
புரிந்துளோர் பெறும் புண்ணிய நான் மடங்குறுவார்.

(காஞ்சிப்புராணம்)

முருகப் பெருமானை நினைந்து பூரண மகிழ்வுடன் உதவுக

-திருப்பணிச் சபையினர்

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க வெற்பை
கூறுசெய்தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க
செவ்வேள் ஏறியமஞ்சை வாழ்க
யானை தனனனங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ் சீரடியார் ரெல்லாம்

T. P. 021 2225799



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்

# திருப்புகழ்

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரு முறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமு நிலையென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங்கு லாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டை மழகிய பெருமாளே
இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியுத னாடையு மழமானும்
அசைந்த தோடும் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய வாழ்த்து

## அன்னப் பணியொளிர வைத்தோர் வாழி

சீரார் மாவைப் பதிவளர் முருகன்
திருவருட் கொடை வாழி
சீரடி யாரிடர் தீர்க்கும் அன்னப்
பணிவளர் திறம்வாழி
ஈராறு விழியோன் இன்னருட் திறத்தால்
இசைபொலி வயல்வாழி
தீராப் பசிப்பிணி தீர்த்தருள் உழவர்
திருவருட் கொடை வாழி
நீரால் நிறைவயல் நிலைபெறக் காக்கும்
தினகரன் அருள்வாழி
ஏரால் எழில்பெறு செல்வம் நிறைத்திடும்
நிலமகள் ஒளிவாழி
வேராய் நிலைபெற வைத்திடும் உத்தமர்
நல்கிடும் கொடைவாழி
நேராய் இப்பணி சிறந்திட உழைத்திடும்
தொண்டர் தம் புகழ்வாழி

கவியாக்கம்:

**சு. குகதேவன்**

கொல்லங்கலட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செல்வி. மானிப்பாய்.